# மெட்ரோ ரெயிலில் காலை, மாலை நிரம்பி வழியும் கூட்டம்

## திருமங்கலம் நிலையத்தில் அதிக பேர் பயணம் செய்கின்றனர்

சென்னை, நவ.2– மெட்ரோ ரெயிலில் பயணிகள் எண்ணிக்கையை அதிகரிக்க நிர் வாகம் பல்வேறு நட வடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.

காலை நேரம்

ரெயில் நிலையங்களில் இருந்து இணைப்பு போக்கு வரத்து வசதியாக ஆட்டோ, ஷேர் கார், சைக்கிள் போன்ற வசதியினை செய்து கொடுத்து இருப்பதால் தற் போது பயணிகள் எண் ணிக்கை அதிகரித்து வரு கிறது. சராசரியாக ஒரு லட் சத்து 20 ஆயிரம் பயணிகள் தினமும் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்கின்றனர்.

மெட்ரோ ரெயிலில் காலை மற்றும் பீக்அவர்சில் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. காலை 9 மணி முதல் 11 மணி வரையில் 22,204 பயணிகளும் மாலை 5 மணி முதல் 8 மணி வரை 37,601 பயணிகளும் செல்கின்றனர். காலை 11 மணி முதல் 12 மணி வரை மிக குறைந்த அளவில் 103 பேர் பயணித்து வருகின்றனர்.

திருமங்கலம்

32 மெட்ரோ ரெயில் நிலையங்களில் அதிக பயணிகள் பயணம் செய்யும் நிலையமாக திருமங்கலம் விளங்குகிறது. இந்த நிலையம் எப்போதும் மிகவும் பிசியாக காணப்படுகிறது. தினமும் சராசரியாக 10 ஆயிரம் பேர் பயணிக்கின்றனர். அதனை தொடர்ந்து சென்ட்ரல் நிலையமும், விமான நிலையமும் அடுத்தடுத்து இடத்தை பிடித்துள்ளது. சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில் இருந்து 9702 பேரும், விமான நிலையத்தில் இருந்து 7358 பேரும் பயணம் செய்கின்றனர்.

இது குறித்து மெட்ரோ ரெயில் நிலைய அதிகாரிகள் கூறியதாவது:–

மெட்ரோ ரெயிலில் பெரும் பாலானவர்கள் வேலைக்கு செல்பவர்கள்தான் பயன் படுத்துகின்றனர். சென்னை யில் இருந்து விமானம் மூலம் பயணம் செய்யக்கூடியவர் களும் அதிகளவு செல்கின் றனர். திருமங்கலம் நிலை யத்தை தான் அதிகளவு மக்கள் பயன்படுத்துகின்றனர். பாடி, முகப்பேர், ரெட்டேரி, அம் பத்தூர் போன்ற பகுதி களில் இருந்து வேலைக்கு செல்வதற்காக வருகின்றனர். மெட்ரோ ரெயிலை தவிர ஆட்டோ, கால் டாக்சியில் அவர்கள் பயணம் செய் தால் அதிகம் செலவிட வேண் டியிருக்கும் என்பதால் மெட்ரோ ரெயிலை பயன் படுத்துகின்றனர்.

ஷேர் கார் வசதி

திருமங்கலத்தில் இருந்து காலை 9 மணி முதல் 11 மணி வரையில் 2784 பேரும், மாலை 5 மணி முதல் 8 மணி வரையில் 2034 பேரும் பயணம் செய்கின் றனர். அடுத்ததாக சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலை யத்தில் இருந்து சமீபத் தில் ஷேர் கார் வசதி செய்யப் பட்டு இருப்பதால் தலைமை செயலகத்தில் வேலை செய் யக்கூடியவர்கள் அதிக ளவு பயன்படுத்துகிறார்கள். சென்ட்ரல் ரெயில் நிலை யத்திற்கு பல்வேறு புறநகர் பகுதியில் இருந்து மக்கள் அதிகளவு வருவதால் அவர் கள் மெட்ரோ ரெயிலை பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு அதிகரித்து வருகிறது.

சென்னை விமான நிலை யத்தை காலை 9 மணி முதல் 10 மணி வரை 1039 பயணிகள் பயன்படுத்துகின்றனர். இங்கு இணைப்பு போக்குவரத்து வசதி செய்து கொடுத்த பிறகு பல்லாவரம், குரோம் பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து நூற்றுக் கணக்கான பயணிகள் வரு கின்றனர்.

விமான நிலையத்தை பொறுத்தவரையில் நள்ளி ரவு அதிகாலையில் அதிக ள்வு பயணிகள் வருகின் றனர். இதனை கணக்கிட்டு மெட்ரோ ரெயில் சர்வீஸ் அதிகரிக்க பரிசீலிக்கப்படு கிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.